## தமிழ்நாடு யாதவ மகா சபைத் தோற்றமும் வளர்ச்சியும்

இந்திய துணைக்கண்டத்தில் யதுவின் வழிவந்த யாதவர்கள் ஏறக்குறைய 20 கோடிக்குமேல் குறிப்பாக உத்தரப்பிரதேசம், பீகார், அரியானா, மத்தியப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் வாழும் பெரும்பான்மை இனமாகும். யாதவ சமுதாயத்தில் இந்தியா முழுவதும் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி காரணமாக 1924 ஆம் ஆண்டு மும்பையில் அறுவைச் சிகிச்சை நிபுணர் டாக்டர் கேட்கர் தலைமையில் கூடிய மாநாட்டில் யாதவ மக்கள் தங்கள் பெயருக்குப் பின்னர் யாதவ் எனும் சொல்லை இணைத்துக் கொள்ள வேண்டுமென்றும், அனைவரும் கீதையை உலகுக்களித்த கண்ணனைத் தலைவனாக ஏற்று ஒன்றுபட்டு வாழவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தின்படி இன்று வடபுலத்தில் உள்ள யாதவர் அனைவரும், பெண்கள் உள்பட யாதவ் என்று தம் இனத்துப் பெயரை இணைத்துக் கொண்டனர். மேலும் 1926ஆம் ஆண்டிலிருந்து அகில யாதவ மகாசபை எனும் ஓர் அமைப்பை ஏற்படுத்தி, ஆண்டுதோறும், இந்தியப் பெருநகரங்களில் மாநாடுகளை நடத்தி யாதவ மக்கள் அனைவரையும் ஒன்றினைக்கும் பணியில் அரும் பாடுபட்டனர். அந்த மகாசபைத் தலைவர்களின் பெருமுயற்சியால் யாதவ சமுதாயத்தில் ஒற்றுமையும் பெரும் மாற்றமும் ஏற்பட்டதோடு அரசியலிலும் தனி இடத்தினைப் பெற்றுள்ளது. 1960–70ஆம் ஆண்டுகளில் 40க்கும் மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், சில மாநிலங்களின் முதல் அமைச்சர்கள், துணை முதலமைச்சர்கள், மாநிலங்களவைத் துணைத்தலைவர், ஆளுநர் போன்ற பெரும் பதவிகளை யாதவர்கள் வகித்துள்ளனர். பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோரின் பிரதிநிதிகளாகத் தலைமைப் பொறுப்பேற்று சமூக நீதிக்காகப் போராடி, இட ஒதுக்கீடு பெற்றுத் தந்துள்ளனர். இம்மகாசபை அரசியல் சார்பற்ற, சமூக முன்னேற்றத்தில் அக்கறைக் கொண்டதால் அனைத்துக் கட்சித் தலைவர்களும் பங்கேற்றுள்ளனர். இச்சபையின் அங்கமான ஸ்ரீ கிருஷ்ணா அறக்கட்டளையின் மூலம் டில்லி – காசியாபாத் பகுதியில் அனைத்து வசதிகளும் கொண்ட யாதவ பவனும் கிருஷ்ணன் கோயிலும் கட்டப்பட்டுள்ளது.

எனினும் 1970–80 ஆண்டுகளில் தமிழகத்தில் பல்வேறு குழுக்களாகப் பல பெயர்களில் அமைப்புகளைத் தோற்றுவித்து இயங்கி வந்தனர். எந்தக் கட்சியும், எந்த அரசும், யாதவர்களை மதித்ததில்லை. நமது ஒற்றுமையின்மையும், பல மாவட்டங்களில் பரந்து கிடப்பதுவும், நம்மை நாமே கண்டுகொள்ளாததும் தான் இதற்கு அடிப்படைக் காரணங்களாகும். வட மாநிலங்களில் யாதவர்கள் அரசியலில் தனியிடம் பெற்று முதிர்ந்திருந்ததால் மாத்திரம் நாம் முன்னேறியதாகக் கருதமுடியாது,. அவர்களின் சமூக ஒற்றுமையை– அரசியல் விழிப்புணர்சியைப் பின்பற்றுவதோடு அவர்களின் வருகையை தமிழகத்தில் உள்ள நாம் சமுதாய நலனிற்காக நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும். 1974ஆம் ஆண்டு மதுரை யாதவர் கல்லூரியில் அகில இந்திய யாதவ மாநாட்டில் வடபுலத்தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். மொழி வேறுபாட்டிற்கும் அப்பாற்பட்ட நிலையிலும் நாம் அனைவரும் யாதவரே என்ற உணர்வை ஏற்படுத்தியதோடு, வடபுலத்தவரையும் தென்னாட்டவரையும் இணைக்கும் பாலமாக அம்மாநாடு அமைந்தது.

இந்தச் சூழ்நிலையில் யாதவ சமுதாயத்தின் மக்களை ஒன்றுபடுத்தி – பல்வேறு பெயர்களில் இயங்கும் அமைப்புகளை ஒருங்கிணைத்து வலிமையோடும், உறுதியோடும், மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப செயல்படவேண்டும் என்ற எண்ணம் இனநலம் நாடும் பல தலைவர்களிடம் ஏற்பட்டது. இந்த எண்ணத்திற்குச் செயல்வடிவம் கொடக்க 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தொடங்கப்பட்ட யாதவம் எனும் எடு ஒரு கருவியாய் அமைந்தது. நமது யாதவ த்தின் ஆசிரியர் பேரா. வி. கலைமணியின் எண்ணம். எழுத்தாற்றல், மதுரை, மானாமதுரை, தஞ்சை, காஞ்சி, வேலூர் போன்ற ஊர்களில் நடத்தப்பட்ட யாதவர் சமுக கருத்தரங்குகள் மாபெரும் எழுச்சியையும், இணைந்து செயல்பட்டால்தான் நமது கோரிக்கைகள் அடையமுடியும் என்ற எண்ணத்தையும் மக்கள் மத்தியல் ஏற்படுத்தியது. இம்முயற்சிக்கு இணையாசிரியர் திரு. எஸ். எஸ். செல்லம், பேரா. ரங்கநாதன் ஆகியோர் உறுதுணையாகவும், அகில இந்திய யாதவ மகாசபைச் செயலாளர் திரு. தெ. நாகேந்திரன், திரு.சொ. கோவிந்தராசன், திரு.

இ. ரெங்கசாமி, கல்லூரி முதல்வர் பேரா. தமிழ்க்குடிமகன் ஆகியோர் உந்து சக்தியாகவும், விளங்கினார்கள். திரு. இராம அரங்கண்ணல் அவர்கள் இணைப்புப் பாலமாகத் திகழ்ந்தார்கள்.

இம்முயற்சியின் பலனாகத் தமிழகத்தில் பல பெயர்களில் இயங்கி வந்த சங்கங்களின் தலைவர்களும், பொறுப்பாளர்களும் இன நலம் பேணும் சமூகத் தலைவர்களும் சென்னை கேரள சமாஜத்தில் 10.04.82 அன்று திரு. அரங்கண்ணல் அவர்கள் தலைமையில் கூடினர். அந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் அனைத்துச் சங்கத் தலைவர்களும், கோவில்பட்டி திரு. எஸ். கோபாலகிருஷ்ண யாதவ் அவர்கள் தலைமையில் இயங்கிய தமிழ்நாடு யாதவ மத்திய பேரவையைத் தவிர, தமிழ்நாடு யாதவ மக்களின் நன்மைக்காக ஒரே பெயரில் தமிழ்நாடு யாதவ மகாசபை எனும் மாநில அமைப்பைத் தோற்வித்தனர். இச்சபை அகில இந்திய மகாசபையோடு இணைந்து செயல்படவும் தீர்மானித்தது. இம்மகாசபைக்கு சென்னையிலுள்ள தொழிலதிபர் திரு. எஸ். லெட்சுமண யாதவ் தலைமையில் கீழ்க்காணும் நிர்வாகக் குழுவினரும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு.எஸ். இலட்சுமண யாதவ் |
| பொதுச்செயலாளர் | : | திரு. சுப. சீதாராமன் |
| பொருளாளர் | : | திரு. பி.வி. உத்திராபதி |
| துணைச்செயலாளர் | : | திரு. எஸ்.எஸ். செல்வம் |
| தலைமை நிலையச் செயலாளர் | : | பேரா. ஜி. அரங்கநாதன் |
| அமைப்புச் செயலாளர் | : | திரு. சி.எஸ். கோபாலகிருஷ்ணன், இராயபுரம். |
| வெளியீட்டுச் செயலாளர் | : | திரு. பேர.வி. கலைமணி |
| பிரச்சாரச் செயலாளர் | : | திரு. கடலூர் கம்பன் |
| மகளிர் அணிச் செயலாளர் | : | திருமதி. யோகம் கிட்டப்பா |
| இளைஞரணிச் செயலாளர் | : | திரு. பி. ஆசைத்தம்பி |
| மாணவர்களின் செயலாளர் | : | திரு. ஏ.கேசவப் பெருமாள் |

அம்மகாசபைத் தலைவர் இல்லமாகிய எண். 12, கோயில் தெரு, மேடவாக்கம், ஏரிக்குடியிருப்பு, சென்னை–10 என்னும் இலக்கத்தில் இயங்கத் தொடங்கியது. இந்த ஒருங்கிணைப்புக் கூட்டத்திற்கு யதுகுல மகாசங்கத்தின் பொதுச்செயலாரும், யதுகுலத் தந்தை என்று போற்றப்படும் சிறந்த சமூக தொண்டர் திரு.சி.வி. திருவேங்கடப்பிள்ளை அவர்கள் வருகை தந்து, சென்னை யதுகுல மகாசங்கம், தமிழ்நாடு யாதவ மகாசபையுடன் இணைகிறது என்று கூறியது வரலாற்றுச் சிறப்பு மிக்கத் தீர்மானமாகும். இவரைப் போலவே அன்று வருகை தந்திருந்த பல்வேறு சங்கத் தலைவர்களும் தங்கள் சங்கம் மகாசபையுடன் இணைகிறது என உறுதியளித்தது தமிழ்நாட்டு யாதவ வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது.

தமிழ்நாடு யாதவ மகாசபை தோற்றுவிக்கப்பட்டதும் நிர்வாகக் குழுத் தலைவர் இல்லத்தில் கூடியது. மாவட்டங்கள் தோறும் ஆர்வமும் அனுபவமுள்ள மாவட்ட அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதைத்தொடர்ந்து தலைவர் தரு. இலட்சுமண யாதவ், யாதவம் ஆசிரியர் திரு.வி. கலைமணி, துணைச்செயலாளர் திரு. எஸ்.எஸ். செல்லம், பேரா. ரங்கநாதன், திரு. எம்.எஸ். ராஜ் யாதவ் போன்றோர் மாவட்டங்கள் தோறும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஆங்காங்கே கிளைகளை உருவாக்கினர். அம்முயற்சிக்கு திரு. நாகேந்திரனும் உறுதுணையாயிருந்தார். வடபுலத்தலைவர்கள் திரு. சியாம்லால் யாதவ், திரு. டி.பி. யாதவ், திரு. சந்திரஜித் யாதவ் போன்றோர் தமிழக வருகையும், கண்ணன் பிறந்த பூமியான மதுராவில் 1981 டிசம்பர் திங்களில் 27 முதல் 29ந் தேதி வரை நடந்த 48 ஆவது அகிய இந்திய மாநாட்டில் தமிழகத்திலிருந்து பெருந்திரளாகக் கலந்து கொண்டதும், மதுரையில் இளைஞர் மாநாடு பேராசிரியர் திருவாசகம் அவர்களால் கூட்டப்பட்டு, படித்து வேலையற்ற இளைஞர்களின் நிலையினை அரசுக்கு வெளிப்டுத்தியதும், மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தியது. மேலும் உறுப்பினர்களுக்குத் தலைமையகத்திலிருந்து உறுப்பினர்களுக்குத் தலைமையகத்திலிருந்து உறுப்பினர் அட்டையும் வழங்கப்பட்டது. எனவே தமிழ்நாடு யாதவ மகாசபை மாநிலம், மாவட்டம், ஒன்றியம், ஊர் கிளைகளின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து ஒரு அரசியல் கட்சியைப் போன்று இயங்கத் தொடங்கியது.

அதன் விளைவாக மகாசபை தோன்றிய ஓராண்டிலேயே அகில இந்திய யாதவ மகாசபையின் 49வது மாநாட்டினை 1983ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 10–12 நாட்களில் சென்னையில் பெரியார் திடலில் மிகச் சிறப்பாகக் கொண்டாடியது. அம்மாநாட்டில் பாராளுமன்றத் துணைத்தலைவர் திரு. ஷியாம்லால் யாதவ், பீகார் சிங்கம் ராம் லக்கன் யாதவ், டி.பி.யாதவ், சந்திரஜித் யாதவ், எம்.எம்.கோஷ், பி.பி.சிங், ஹரமோகன்சிங் கர்னல் ராம் சிங், பலராம் சிங், பிரம் பிரகாஷ், சக்கரபாணி, எஸ். மாரியப்பா, மகளிரணித் தலைவி திருமதி. சாந்தி தேவி, செல்வி சசியாதவ் ஆகிய வடபுலத் தலைவர்களும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களும், தலைவர்களும் கலந்துகொண்டனர். மூன்றாம் நாள் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் ஒற்றுமை மாநாட்டிற்கு திராவிடர் கழகத் தலைவர் திரு. கி. வீரமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அம்மாநாட்டில் டாக்டர் கலைஞர் மற்றும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்டோர் தேசிய கூட்டமைப்பின் தலைவர் பிரம்பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றியது குறிப்பிடத்தக்கது. அடுத்த ஆண்டு 1984 இல் பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் (NUBC) மாநாடு அதே பெரியார் திடலில் திரு. கி. வீரமணி அவர்களால் நடத்தப்பட்ட மாநாட்டில் இந்தியா முழுவதிலிருந்தும் குறிப்பாக வடபுலத்து பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட அமைப்புகளின் தலைவர்கள் கலந்து கொண்டு மண்டல் கமிஷன் பரிந்துரைகளை அமல்படுத்தி மத்திய அரசை வற்புறுத்தியது. அம்மாநாட்டின் வெற்றிக்கு தமிழநாடு யாதவ மகாசபை பெரிதும் பாடுபட்டது.

அதைத்தொடர்ந்து வட மாநிலங்களில் மதுரா, கட்டாக், தூர்க் கான்பூர், பெங்களூர் கர்நாடக, கஞ்சன்காடு(கேரளா) ராஜ்கோட் (குஜராத்), பொன்விழா மாநாடு பிஜபூர், விசாகை (ஆந்திரா) போன்ற நகரங்களில் நடைபெற்ற அகில இந்திய யாதவ மாநாடுகளிலும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் தேசிய ஒன்றியத்தின் (NUBC) மண்டல் குழு பரிந்துரைகளை நிறைவேற்றக் கோரி நடைபெற்ற மாநாட்டிலும், ஒருவார பாராளுமன்ற முற்றுகைப் போராட்டம் ஆகியவற்றிலும் தமிழகத்திலிருந்து பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

வடமாநிலத்து முதல்வர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் தலைவர்கள் குறிப்பாகத் திரு. பி.ஆர்.பகத், திரு. டி.பி. யாதவ், ஹர்மோகன்சிங், இராம் லக்கன் சிங், ஆகியோர் தமிழகத்திற்கு அடிக்கடி வருகை புரிந்தனர். அதனால் யாதவர் ஒற்றுமையும், அரசியல் செல்வாக்கும் ஏற்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. எஸ் கோபால கிருஷ்ண யாதவ், திரு. தெ. நாகேந்திரன் (இருமுறை) அகில இந்திய யாதவ மகாசபையின் தலைவராகவும், திரு. எஸ். இலட்சுமண யாதவ் பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. தமிழக யாதவர்கட்கும், மகாசபைக்கும் பெருமை தேடித்தந்தது.

திரு. எஸ். இலட்சுமண யாதவ் 10.04.82லிருந்து 26.1.1990 வரை ஏறத்தாழ எட்டு ஆண்டுகள் மகாசபையின் தலைவராச் செயல்பட்டுள்ளார். எனினும் செயலாளர் பொருளாளர் பதவிகளில் மாற்றங்கள் ஏற்பட்டன. 1985 ஆம் ஆண்டு நடந்த தமிழக சட்டமன்ற பொதுத் தேர்தலில் திரு. சீதாராமன் போட்டியிட்டதால் அவருக்குப் பதிலாக பேரா. வி. கலைமணி செயலாளராக்கப்பட்டார். அதேபோன்று திரு. உத்திராபதி மறைவிற்குப் பின் பொறியாளர் திரு. எஸ். கிருஷ்ணன் சிறிது காலமும், பின்னர் திரு. எம்.எஸ். ராஜ் யாதவ், பொறியாளர் திரு. பி. செல்வம் ஆகியோர் பொருளாளராகவும், தலைமை நிலையச் செயலாளராக திரு. பி. கேசவனும் செயல்பட்டனர்.

இக்காலக் கட்டத்தில் அ.தி.மு.க. ஆட்சி நடைபெற்றதால் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களை இருமுறை சந்தித்து யாதவ் கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

அச்சந்திப்புப் பயனளிக்காததால் 15.7.1987 இல் மதுரையில் கீழ்க்காணும் 5 கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக யாதவர்களின் மாபெரும் ஊர்வலமும், உண்ணாவிரதப் போராட்டமும் நடைபெற்றன.

ஐந்து கோரிக்கைகள்:

1. தமிழ்நாடு அமைச்சரவையில் யாதவ இனத்தின் சார்பாக ஒருவரையேனும் அமைச்சராக்க வேண்டும்.

2. தமிழ்நாடு தேர்வாணைக்குழுவில் யாதவர் ஒருவரை உறுப்பினராக்க வேண்டும்.

3. தமிழ்நாட்டில் உள்ள 65 லட்சம் மக்களின் யாதவர் மக்கள் தொகைக்கேற்ப, கல்வி, வேலை வாய்ப்புகளில் 10 சதவீதம் ஒதுக்கீடு வழங்குதல் வேண்டும்.

4. தமிழக பால்வள வாரியங்களிலும், கூட்டுறவு பால் சங்கங்களிலும், கால்நடை கல்லூரிகளிலும், யாதவர்க்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

5. முதன் முதலில் இந்தியப் பெருநாட்டில் வெள்ளையருக்கு எதிராகவும், அவர்களின் ஏஜெண்டான கன்சாகிபை எதிர்த்தும், 1739 இல் வீரப்போர் புரிந்து உயிரையும் தியாகம் செய்து விடுதலைக்கு வித்திட்ட மாவீரன் முத்துவிற்கு பெயரால் ஒரு மாவட்டம் அமைக்க வேண்டும். இப்போராட்டம் மதுரை மாவட்ட நிர்வாகிகளால் ஏற்பாடு செய்யப்பட்டாலும், தமிழக முழுவதிலுமிருந்தும் யாதவ தலைவர்களும், பெருவாரியாகக் குவிந்து மதுரை நகரையே குலுக்கியெடுக்கும் வகையில் கடலெனக் காட்சி வழங்கி சமுதாயத்துக்குச் சிறப்பினைப் பெற்றுத் தந்தனர். இப்பெரும் நிகழ்ச்சிகள் நாளிதழ்களிலும், நமது யாதவம் 1987 அக்டோபர் மாத இதழிலும் வெளியிடப்பட்டுள்ளன.

காந்திவழியில் நடந்த இந்த உண்ணாவிரதப் போராட்டத்தைக் கண்டுக்கொள்ளாத அரசு, பிறகு பிற்படுத்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளைக் கேட்டறிந்து பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காண முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஜாதிச் சங்கங்களைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்ததால் அந்த அழைப்பை ஏற்று 26.11.87 அன்று தமிழ்நாடு யாதவ மகாசபையும், அதன் தலைவர் திரு. எஸ். லட்சுமண யாதவ், பொதுச் செயலாளர் பேரா. வி. கலைமணி, மற்றும் திரளான தோழர்களும் கலந்து கொண்டனர். செயலர் பேரா. வி. கலைமணி அவர்கள் அக்கலந்துரையாடலில் ஆற்றிய உரையை (யாதவம் நவம்பர் 87 இதழில் வெளியிடப்பட்டுள்ளது) முதலமைச்சர் மிகவும் ஆர்வமுடன் கேட்டதோடு, வீரன் அழகுமுத்துகோன் பற்றிய இரு புத்தகங்களையும் கேட்டுப்

பெற்றுக்கொண்டதால் யாதவர் கோரிக்கைகளை நிறைவேற்றும் எண்ணம் ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் அடுத்த சில நாட்களில் அவர் மறைந்தது பின்னடைவை ஏற்படுத்தியது. எனிலும் 1976– 1985 ஆண்டுகளில் நடைபெற்ற அ.தி.மு.க. ஆட்சியில் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள் தொழிலாளர் அமைச்சராகவும், பின்னர் அக்கட்சியின் பொதுச்செயலாளராகவும் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களால் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. எம்.ஜி.ஆர். அவர்களோடு நடத்தப்பட்ட கலந்துரையாடலுக்குப் பின் திரு.அம்பாசங்கர் தலைமையில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் கமிஷன் அமைக்கப்பட்டது. அக்குழுவில் கோவில்பட்டி திரு. எஸ். கோபாலகிருஷ்ண யாதவ் அவர்களும் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் சென்னை ராஜாஜி மண்டபத்தில் கூட்டிய கூட்டத்தில் பேரா. வி. கலைமணியும், திரு. எஸ். எஸ். செல்லமும் யாதவ மகாசபை சார்பாகக் கலந்து கொண்டு 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தியதோடு, யாதவர்கள் ஆடு, மாடுகளை நம்பி வாழ்வாதலும், குறிப்பாக முகவை மாவட்ட யாதவர் முகவையிலிருந்து தர்மபுரி வரை ஆடுகளை மேய்க்கச் சென்று சென்று நாடோடிகளைப் போல் (Semi-Nomadic) வாழ்க்கை நடத்துவதாலும், கர்நாடக மாநிலத்தில் உள்ளது போல் யாதவர்களுக்கும் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை ஒதுக்கி தந்து மிகவும் பின்தங்கியோர் பட்டியலில் சேர்க்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

மேலும், இக்கோரிக்கைகளை வலியுறுத்தியும், மண்டல் குழு அறிக்கையை நிறைவேற்ற மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமாறும் கோரி 30.10.1999 அன்று மாநில அளவிலான மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது. இத்தனைப் போராட்டங்களுக்குப் பின்னரும் பலன் ஏதும் இன்றி இன்றுவரை யாதவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க போராடும் நிலைதான் உள்ளது.

**டாக்டர் எம். கோபாலகிருஷ்ணன் தலைமை**

1996 ஆம் ஆண்டு இறுதியில் திரு. எஸ். இலட்சுமணயாதவ் அவர்கள் திடீரென அகால மரணம் அடைய யாதவ சமூகமே துயரத்தில் ஆழ்ந்தது. அவரின் துக்கத்தை விசாரிக்க வந்த மகாசபைத் தலைவர் திரு. அ. சொக்கலிங்கனார் அவர்களும் சில மாதங்களில் அண்ணாமலை நகரில் இயற்கை எய்தினார். அடிபட்ட காலிலேயே படும் எனும் மொழிக்கேற்ப யாதவ சமுதாயம் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாகி தலைவனை இழந்த கப்பலைப் போல தத்தளித்துக் கொண்டிருந்தது. அடுத்து 11.5.97 அன்று சென்னை ஜெர்மன் ஹாலில் கூடிய மாநிலப் பொதுக்குழுவில் திரு. இராம அரங்கண்ணல் அவர்களின் அறிவுரைக்கேற்ப இந்தியன் வங்கியின் முன்னாள் தலைவர் டாக்டர் எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் மகாசபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பேரா. வி. கலைமணி பொதுச் செயலாளராகவும், திரு. ந. ராஜாமணி அவர்கள் பொருளாளராகவும், திரு. எம். ஆர். பன்னீர் செல்வம் மாணவரணி செயலாளராகவும், தொடர்ந்து பதவியேற்றனர். பின்னர் மாநில, மாவட்டப் பிரதிநிதிகளும் அறிவிக்கப்பட்டனர். திரு. எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் வங்கியின் தவைராயிருந்ததால் நிர்வாகத் திறமையும், அரசுப் பணியிலிருக்கும்போதே 1995 ஆம் ஆண்டு யாதவர்களின் எழுச்சி மாநாடு நடத்தி யாதவர்களின் அன்பையும் ஆதரவையும் பெற்றிருந்தார். மேலும் வங்கித் தலைவராயிருந்தபொழுது, அதிக வங்கிக் கிளைகளைத் தொடங்கி வருமானம் பெருக்கியதோடு, வங்கியின் மூலம்அளித்த உதவித் தொகையால் பல கல்லூரிகள் தோன்றின. சிறுவியாபாரிகளுக்கும் கடனுதவி அளித்ததால் ஏழை, எளியவர்களும் பயனடைந்தனர். அதனால் பிற இனத்தவரின் நன்மதிப்பையும், நல்லாதரவையும் பெற்றிருந்தார். மகாசபையில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. நமது யாதவம், புதிய யாதவம் என மாற்றப்பட்டது.

திரு. கோபாலகிருஷ்ணன் தலைமைப் பொறுப்பு ஏற்ற பின்பு மதுரையில் கிருஷ்ண ஜெயந்தியும், வழக்கறிஞர் திரு. கிருஷ்ணமூர்த்தி, தஞ்சையில் திரு. அழகப்பன், எஸ். அடைக்கலம் அவர்களின் முயற்சியில் மாபெரும் பொதுக்குழுக் கூட்டமும் நடைபெற்றது.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை யாதவ மகாசபைக் கூட்டத்தைப் புதுப்பித்துக் கட்டவேண்டுமென்று கடந்த இரண்டு ஆண்டுகளாக முயன்றும், பல்வேறு இடையுறுகளால் முயற்சி வெற்றி பெறாமல் போயிற்று. அடுத்து முயன்றாலும் ''ஆகா நாள் அன்றி எடுத்த கருமம் கூடவரா'' என்னும் முதுமொழிக்கேற்ப புதிய கட்டடம் எழுப்ப எடுத்த முயற்சியும் கைகூடி வராமல் காலம் கடந்து வந்தது. எனினும் தமிழ்நாடு யாதவ அறக்கட்டளைத் தலைவர் திரு. எம். கோபால கிருஷ்ணன் அவர்கள், செயலாளர் திரு. ஏ. தர்மராஜ் ஆகியோரின் பெருமுயற்சி காரணமாக இடையூறுகள் நீங்கி, 2002ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25ஆம் நாள் புதிய கட்டடத்திற்கு அறக்கட்டளையின் துணைத்தலைவர் பெங்களூர் திரு. எம்.கே. சொக்கலிங்கம் அவர்களால் புதிய கட்டத்திற்குப் பூமி பூஜை போடப்பட்டது. அன்றே அறக்கட்டளை அறங்காவலர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் கூட்டமும் நடைபெற்றது.

யாதவ மாளிகை கட்டுமானப்பணி தொடங்கி இரண்டு மாடிக்கட்டடத்திற்குத் திட்டமிட்டு மூன்று மாடிக்கட்டடங்களாக யாதவ மாளிகை எழில்மிகு தோற்றத்துடன கட்டி முடிக்கப்பட்டு 2004 ஆம் ஆண்டில் திறப்புவிழாவும் நடைபெற்றது. நிதியளித்தவர்களுக்கு பொன்னாடையும் நினைவுப் பரிசும் வழங்கப்பட்டது. ''எண்ணிய எண்ணியாங்கு எய்துவ எண்ணியர் திண்ணியராகப் பெறின்'' எனும் வள்ளுவர் வாக்கிற்கொப்ப டாக்டர் எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் தான் எண்ணியபடி யாதவ மாளிகையைக் கட்டி முடித்தது பாராட்டுக்குரியது. யாதவ சங்க அலுவலகமும், மகளிரணியும் யாதவ மாளிகைக்கு மாற்றப்பட்டுச் செவ்வனே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

12.12.2004 அன்று மைலப்பூர் சமூக நலக் கூட்டத்தில், தேர்தல் அதிகாரியாக செயற்குழுவால் நியமிக்கப்பட்ட பேரா. சீனிவாசநாராயணசாமி அவர்கள் மறைவிற்குப்பின் மாநிலப் பொதுக்குழுக்கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் திரு. எம். கோபாலகிருஷ்ணன் அவர்கள் தலைவராகவுபேரா. வி. கலைமணி பொதுச் செயலாளராகவும், திரு. எம். ஆர். பன்னிர்செல்வம், பொருளாளராகவும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டனர் புதிய மாநில, மாவட்டப் பொறுப்பாளர்களும் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டனர்.

அதன் தொடர்ச்சியாக தலைவராக திரு. எம். கோபாலகிருஷ்ணன் செயல்பட்டுக் கொண்டு இருந்தார். இந்த சூழலில் மகாசபை பதிவின் அவசியம் ஏற்பட்டது. 2005ல் தமிழ்நாடு யாதவ மகா சபை பதிவு செய்யப்பட்டது. தொடர்ந்து தலைவராக திரு. எம். கோபாலகிருஷ்ணன் தலைவராக திறம்பட செயல்பட்டார். மற்ற மாநில நிர்வாகிகள் அவ்வப்போது மாற்றி அமைக்கப்பட்டனர. இச்சூழலில் தலைவர் அய்யா கோபாலகிருஷ்ணன் அவர்கள் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தொடர் சிகிச்சையில் இருந்த அய்யா அவர்கள் 30.09.2020 அன்று இயற்கை எய்தினார். அவரது மறைவு யாதவ மக்களுக்கு பெரும் இழப்பாகும். மறைந்த அய்யா கோபாலகிருஷ்ணன் மறைவின் போது பொதுச் செயலாளராக இருந்த திரு. A.M. செல்வராஜ் அவர்களும் பொருளாளராக திரு. கே. எத்திராஜ் அவர்களும் எந்தவித தொய்வும் இன்றி திறம்பட மகா சபையை செயல்படுத்தினார்கள்.

இதனிடையே தமிழ்நாடு யாதவ மகா சபைக்கு எல்லா வகையிலும் பொருத்தமான தலைவரை தேர்ந்தெடுக்க முடிவு செய்து அனைத்து திறமைகளும் ஒருங்கே பெற்ற திரு. நசே. ஜெ. ராமச்சந்திரன் அவர்கள் பெயரை முன் மொழிய ஒட்டுமொத்த நிர்வாகமும் முடிவு செய்து தீர்மானம் நிறவேற்றி அதன் முடிவை மகாசபையின் மூத்த நிர்வாகிகள் திரு. நசே. ஜெ. இராமச்சந்திரன் அவர்களிடம் எடுத்துறைத்தனர். முதலில் தயங்கினாலும் அனைவரின் கருத்தையும் ஏற்று தலைவராக ஒப்புக்கொண்டார். அதன்படி 13.04.2022 அன்று தமிழ்நாடு யாதவ மகாசசையின் புதிய தலைவராக மூத்த நிர்வாகிகள் முன்னிலையில் நாசே. ஜெ. இராமச்சந்திரன் பொறுப்பு ஏற்றுக் கொண்டார்.

திரு. நாசே. ஜெ. இராமச்சந்திரன் அவர்கள் கடந்துவந்த பாதை

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டிக்கு அடுத்த வழுதாவூரில் பள்ளித் தலைமை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு. ஜானகிராமன் அவர்களின் மூத்தமகன் நாசே. ஜெ. இராமச்சந்திரன் அவர்கள், அவருக்கு அப்போது வயது 58, 1974 ஆம் ஆண்டு மாதாவரம் பால்பண்ணையில் கறவை மாடுகள் வைத்து பால் பண்ணை நடத்தினார். பின்னர் அச்சகம் அமைத்துத் தொழில் புரிந்து வந்தார். 1979 ஆம் ஆண்டு மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் வேலையற்ற படித்த இளைஞர்கட்கு தன்னுரிமை வேலை வாய்ப்புத் திட்டத்தைச் செயல்படுத்த நாசே என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அவ்வமைப்பில் இராமச்சந்திரன் தன்னே முழு நேரமும் எடுபடுத்திக் கொண்டு தலைமைப் பொறுப்பேற்றுப் பணியாற்றினார். தமிழக அரசு மாநகரங்கள், நகராட்சி அலுவலக வளாகங்கள் ஆகியவற்றில் ஒரு சிறு இடத்தில் குளம்பி (காபி) தேநீர், தின்பண்டங்கள் போன்றவற்றை விற்கவும், அச்சிறுகடைகள் அமைக்க வங்கிகள் வழியாகக் கடன் பெற்றுத்தரவும் இவ்வமைப்பு சிறப்புறச் செயல்பட்டது. கொலை, கொள்ளை முதலியவற்றினின்று மக்களைக் காக்கத் தனியார் காவற்படை, தனியார் அஞ்சல் பணி ஆகியவை அமைத்தார். இவற்றால் வேலையற்ற இளைஞர் பயனுற்றனர். அதனால் இவரே நாசே. இராமச்சந்திரன் என்றே அழைத்தனர்.

1984 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதலுடன் தைவன், ஹாங்காங் ஆகிய நாடுகளிலிருந்து பெரிய மீன்பிடிக் கப்பல்களைக் கொணர்ந்து ட்யூனா மீன், இறால் ஆகியற்றைப் பிடித்துப் பதப்படுத்தி வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்தார். அக்வே என்கிற பெரிய நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒப்பந்தத்துடன் மரக்காணத்தில் இறால் குஞ்சு பண்ணை அமைத்துள்ளார். அண்ணா நகர், தியாகராயர் நகர், வேப்பேரி ஆகிய இடங்களில் இவரது இன்டர்நெட் மையங்கள் இயங்கி வருகின்றன. விரைந்து செயலாற்றும் பண்பு இவர் பால் உள்ளது. கைனடிக் ஹோண்டா ஸ்கூட்டர் விற்பனை செய்கிறார். இங்கிலாந்து நாட்டு கிளாஸ்கோ கப்பல் துறை சார்ந்த கல்லூரியுடன் ஒப்பந்தம் செய்து கடல் சார்ந்த பயிற்சிக் கல்லூரியை நடத்துகிறார். இது தற்சமயம் கடல்சார் பல்கலைக்கழகமாக